Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 10 (16.11.2002) சனிக்கிழமை இதழ் : 47


Pc PARADISE

நியாயமான விலையில் தரமான கணனிகளையும் கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise
இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)
TP No. 0777-271220 (சி-156)

## புலிகளுக்கு அங்கீகாரம் அளிக்க அமெரிக்கா, பிரிட்டன் முயற்சி!

### பொ.ஐ. முன்னணி கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குக் கூடுதல் நன்மை கிடைக்கிறது என்றும், புலிகளுக்கு அங்கீகாரமளிக்க சர்வதேசம் முயற்சிப்பதாகவும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### யாழில் 600 பொதுமக்கள் காணாமற்போனதற்கு பொறுப்பு

## ஜனாதிபதி, இராணுவ அதிகாரிகள் மீது சர்வதேச மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச்சபை (அம்னெஸ்ரி இன்ரர்நஷனல்) 1996 இல் யாழ்ப்பாணத்தில் 600 பொதுமக்கள் காணாமற்போனமைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் இரு உயர் படையதிகாரிகளையும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த அமைப்பினர் தாம் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து கண்ட முடிவின்படி ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அப்போது யாழ்ப்பாணத்தில் உயர் படை அதிகாரிகளாக செயற்பட்ட ஜானக பெரேரா, ரோகான் தளுவத்த ஆகியோரே இச்சம்பவங்களுக்குப் பொறுப்பு என குறிப்பிட்டுள்ளது.

படையதிகாரிகளின் இந்தப் பெரும் குற்றச் செயல்களை தடுக்க (10ஆம் பக்கம் பார்க்க)

# கேணல் தீபன் - ஒஸ்ரின் தலைமையில்

# இன்று யாழ்.பாதுகாப்புக்குழுக் கூட்டம்!

## தெல்லிப்பளையில் நடைபெறவிருந்த சந்திப்பு பாதுகாப்புக் கருதி முகமாலைக்கு மாற்றம்





(நமது நிருபர்)

**தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உபகுழுவின், யாழ்.பிராந்தியத்துக்கான கூட்டம் இன்று காலை முகமாலை சூனியப் பிரதேசத்தில் நடைபெறுகின்றது. விடுதலைப் புலிகள் தரப்பில் வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனும், அரசுத்தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் இருதரப்புப் பிரதிநிதிகளுக்கும் தலைமை தாங்குகின்றனர்.**

முன்னதாக இக்கூட்டம் தெல்லிப்பளையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த 10 ஆம் திகதி ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு உபகுழுவின் முதலாவது சந்திப்பில் இது பற்றி முடிவுசெய்யப்பட்டிருந்தது.

ஆனால் - சில காரணங்களால் இச்சந்திப்பு முகமாலைக்கு மாற்றப்பட்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இன்றைய சந்திப்பில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கான தனிப்பட்ட பாது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வீதியைக் கடந்த சிறுவன் லொறியில் மோதுண்டு பலி!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் நிகழ்ந்த வீதி விபத்தில் ஏழு வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

நேற்று மாலை 6 மணியளவில் நடைபெற்ற மேற்படி விபத்தில் வைகுந்தநாதன் அச்சுதன் (வயது.7) என்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை மாணவனே மரணமடைந்தவராவார்.

ஆறுகால்மடம் பொன்னையா வீதியில் உள்ள விளையாட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் தலைமையில் ஒஸ்லோவில் நிதியுதவி மாநாடு

ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அமெரிக்காவின் தலைமையில் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாநாட்டுக்கு அமெரிக்காவின் சார்பில் பிரதி ராஜாங்கச் செயலாளர் ரிச்சட் ஆர்மிரேஜ் கலந்துகொள்ளவிருக்கிறார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட அண்மையில் அமெரிக்கா சென்று ரிச்சட் ஆர்மிரேஜை சந்தித்தபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக ஜப்பானில் இடம்பெறவுள்ள உதவி வழங்கும் கூட்டத்தைப் பற்றியும் அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளருக்கு எடுத்துக்கூறியுள்ளார்.

## பட்டாசு ஏற்றிச் சென்ற கப்பல் வடபகுதிக் கடலில் எரிகிறது!

றொட்டோராம் நோக்கி பட்டாசுகள் ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தால் கப்பலில் பரவிய தீ தொடர்ந்து நான்காவது நாளாக எரிந்துகொண்டிருக்கிறது.

இந்த வெடிவிபத்து இலங்கைக்கு 250 கடல்மைல் தொலைவில் வடபகுதிக் கடலில் இடம்பெற்றுள்ளது.

வெடிவிபத்து ஏற்பட்டதால் கப்பல் மாலுமி ஒருவர் இறந்துள்ளார் என்றும், இன்னுமொருவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



செம்மணியில சிந்தின கண்ணீர் எங்க தப்பினாலும் சும்மா விடாது..




## உடத்தலவின்னப் படுகொலை சந்தேகநபர்களுக்கு பிணை!

கண்டி உடத்தலவின்னவில் 10 பேர் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமான 15 சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட இந்த நீதிமன்றம், இவர்கள் ஒவ்வொருவரையும் 5 லட்சம் ரூபா சொந்தப் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, அவரது புதல்வர்களான லொஹான் ரத்வத்த, சானக ரத்வத்த ஆகியோரும் சந்தேக நபர்களில் அடங்குகிறார்கள்.

அடுத்த வழக்கு விசாரணை ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

## புலிகள் பங்கேற்கும் முதல் சர்வதேச மாநாடு

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப்புலிகளின் சார்பில் அதன் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக முக்கியஸ்தரும், தாய்லாந்துப் பேச்சுக்களில் புலிகளின் தரப்பில் பங்குபற்றியவருமான ஜோய் மகேஸ்வரனும் கலந்துகொள்வாரெனத் தெரியவருகின்றது.

இப்பங்கேற்புப் பற்றி தகவல் வெளியிட்ட இந்தோ-ஏஷியன் செய்திச் சேவை, விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாகப் பங்கேற்கும் முதலாவது சர்வதேச மாநாடு இதுவென்றும் குறிப்பிட்டது.

## ஒஸ்லோ கூட்டத்தில் இந்தியா பங்குபற்றாது

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் - இந்தியா உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்ளமாட்டாதென தெரியவருகின்றது.

இத்தகவலை பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம கொழும்பில் வைத்து தெரிவித்தார்.

SERENDIB

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 517019

(சி-148)

# மூன்று உபகுழுக்களின் செயற்பாடுகளும் மிகத் திறமையாக அமைந்துள்ளன!

## முகமாலைச் சந்திப்பு முக்கியமானது என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

தாய்லாந்துப் பேச்சுக்களின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட மூன்று உபகுழுக்களும், மிகத் திறமையா கச் செயற்பட ஆரம்பித்துள்ளதாக- அரசாங்கப் பேச்சாளரும், அரசிய லமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரி வித்துள்ளார்.

சீனச் செய்தி ஸ்தாபனமான சின குவா நியூஸ் ஏஜன்சிக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

குறிப்பாக - சில தினங்களுக்கு முன் முகமாலையில் கடற்படையின ரும், கடற்புலிகளும் நடாத்திய உயர் மட்டச் சந்திப்பானது - கடற்பகுதி சம்பந்தமான பிரச்சினைகளை மாவட்ட மட்டங்களிலேயே, மேலும் தீவிரம் கொள்ளாமல் தீர்த்துக் கொள்வ தற்கு உதவியாக அமைந்துள்ளன எனத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ்- இந்த நேருக்கு நேர் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுக்கள் வேகம் கொள்ள ஆரம்பித்ததன் பின்னர் - வெளிநாட்டு முதலீட்டாளர்களோடு, தனியார் துறையினரும் நம்பிக்கை யோடு இலங்கையில் முதலீடு செய்ய ஆரம்பித்திருப்பதாகவும் அப்பேட்டியில் அமைச்சர் பீரிஸ் மேலும் கூறினார்.

# அறிவுச் செல்வம் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள்



ரீ.ரீ.என். தொலைக்காட்சி சேவையினர் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடாத்திய யாழ்.வலய பாடசாலை மாணவர்களிடையிலான அறிவுச் செல்வம் போட்டி நிகழ்வில் 1ஆம் இடம் பெற்று 1 லட்சம் ரூபா பரிசு பெற்ற இந்து மகளிர் கல்லூரி மாணவி மு.ராதிகா, 2ஆம் இடம் பெற்று ரூபா 50 ஆயிரம் பரிசுபெற்ற மத்திய கல்லூரி மாணவன் ந.பிரதீபன், 3ஆம் இடம் பெற்று ரூபா 25 ஆயிரம் பரிசுபெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ச.லாவண்யா ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## குருநாகல் சென்றுள்ள சமாதானக் குழுவினர்

(கொழும்பு)

மனித முன்னேற்ற நடு நிலைய சமாதானக் குழுவினர் சமாதான உற வுப்பாலப் பயணம் ஒன்றை மேற் கொண்டு நேற்று குருநாகலுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் குருநாகலிலுள்ள சிங் கள சகோதரர்களின் வீட்டில் தங் கியிருந்து திங்கட்கிழமை திரும்ப வுள்ளனர். இதற்கென மனித முன் னேற்ற நடுநிலையத்தின் சமாதானக் குழுவின் 48 அங்கத்தவர்கள் இதன் இணைப்பாளர் வெ.அமில்டன் தலை மையில் நேற்று புறப்பட்டுச் சென் றுள்ளனர்.

## ஒலிப்பதிவு நாடா அறிமுக விழா

இசைப்பிரியனின் இசை நெறி யாள்கையில் உருவான - கல்லறை தழுவும் கானங்கள் ஒலிப்பதிவு நாடா அறிமுக விழா நாளை பி.ப. 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது. இவ் ஒலிப்பதிவு நாடாவை நிதர்சனம் நிறுவனம் தயாரித்துள்ளது.

# இன்றைய நாள் இனிய நாள்

**16.11.2002 - சனிக்கிழமை**

**மேடம்** :- தேகசுகக்குறைவு, மனச்சஞ்சலம், தேவையற்ற செலவு, வீண் வாக்குவாதம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் மத்திம நிலை

**இடபம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, பெண்கள் மகிழ்ச்சி, தெய்வதரிசன பலன், கல்வி முன்னேற்றம், வியாபாரம் மத்திம நிலை.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, செய்தொழில் முன்னேற் றம், பொது சேவையில் மதிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று,மனஅமைதி, பிதாவுடன் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை

**சிங்கம்** :- தேகசுகக்குறைவு, மனச்சஞ்சலம், வீண்செலவு, புதிய காரியம் ஆரம்பிப்பது தவிர்க்கப்படல் வேண்டும், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, பெண்கள் மகிழ்ச்சி, உள்ளூர்ப் பயணம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- தேகசுகம் நோய் நீக்கம், மனஅமைதி, பணவரவு, எதிரியின் ஆணவம் குறைதல், கடன் வசூல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, புத்திர சுகம், பொது சேவையில் மதிப்பு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**தனு** :- மாதா தேகசுகக் குறைவு,பெண்கள் சுகக் குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**கும்பம்** :- மனச் சஞ்சலம், பெண்களினால் சண்டை, வரவுக்கு மிஞ்சிய செலவு, வாக்குவாதம், கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, பெண்கள் மகிழ்ச்சி, விருந்தினர் சங்கமம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

ராஜா
யாழ்ப்பாணம்.
தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)



நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், சந்தியா நடித்த
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
யூத்
UNIVERSAL SOLDIER
(சி-139)

ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெஷல்
குங்குமப்பூ சிக்கன் புரியாணி
ரூபா 125
ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டிக்குளி.
(சி-163)

உங்கள் எதிர்காலம் அமைதி உடையதாக உள்ளதா என அறியவும் மற்றும் திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கும் உள்ளூர், வெளியூர் சாதகக் குறிப்புகள் எழுதிக்கொள்ளவும்
தொடர்பு கொள்ளுங்கள்
சிவா சோதிடர்
111, கோவில் வீதி,
நல்லூர்.
(சி-175)

உங்கள் அன்புச் செல்வங்களின்
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
நமது ஈழநாட்டில்!
முற்றிலும் இலவசமாக!!
உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின்
பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும்,
புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.
வாழ்க வளமுடன்!
சிறாரின் பெயர் :................................
முகவரி :................................
பிறந்த ஆண்டு :................................
கூப்பன்கள்ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
................................
பெற்றார் ஒப்பம்

# கேள்வி அறிவித்தல்

## அரசாங்க செயலகம், கச்சேரி, கிளிநொச்சி

01) கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் கிளிநொச்சி மாவட்ட (அரசாங்க அதிபர், கச்சேரி) கேள்விச் சபைத் தலைவரினால் 28.11.2002 மு.ப. 10.00 மணிவரை கிளிநொச்சிக் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.
பெறப்பட்டகேள்விகள் உடனடியாக இவ் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்வி கோருபவர் கள் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அவரது பிரதிநிதி ஒருவர் கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

02) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

03) ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை கட்டடங்கள் திணைக்கள (மாகாணம்) கிளிநொச்சி நிறைவேற்று எந்திரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04) தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்கள (மாகாணம்) பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 22.11.2002 பி.ப. 4 மணிவரை கிளிநொச்சி, கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று எந்திரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக நிர்மாண வேலை கட்டம் - 1 கிளிநொச்சி. | தரம் 09 | 4000.00 | 500.00 |

05) கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோ கிக்கப்படும்.

06) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தி. இராசநாயகம்,
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-184)

## வட- கிழக்கு மாகாணத்தில்
# அரச சேவை வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படும்!

(நமது நிருபர்)

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரச சேவை வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. வட-கிழக்கு மாகாணத்தில் அரச சேவைகளில் பெருமளவான வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில் உள்ளன. இதனால் அரச நிர்வாகச் செயற்பாடுகளைத் திருப்திகரமாக நிறைவேற்ற முடியாத நிலை நிலவுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டே வட- கிழக்குப் பகுதிகளில் உள்ள அரச சேவை வெற்றிடங்களை நிரப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. ஏற்கனவே வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சைகள் பல நடத்தப்பட்ட போதும் பெறுபேறுகள் அறிவிக்கப்படவில்லை.

அரசசேவை நியமனங்கள் வழங்குவதை அரசாங்கம் இடை நிறுத்தியுள்ளதால், போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாமல் உள்ளன. வட-கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரசின் நிலைப்பாட்டில் சிறு மாற்றங்களைச் செய்யப் பிரதமர் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

வட- கிழக்குப் பகுதிகளுக்கு மட்டும் விசேடமாக அரச சேவைகளில் ஆட்சேர்ப்பு செய்வதால், ஏற்கனவே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் அடிப்படையில் இந்நிய மனங்களை வழங்குவதற்கும் கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள சுய விருப்பின் அடிப்படையில் சேவையில் இருந்து ஓய்வு பெறுதல் திட்டத்தினூடாக ஆட்குறைப்புச் செய்யும் நடவடிக்கையையும் வட-கிழக்கில் அமுல் செய்வதில்லை என கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து பிரதமருக்கு நெருக்கமான ஆலோசகர் ஒருவர், வட-கிழக்கு மாகாண சபையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27

**ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரணமான ஒரு நிகழ்வல்ல: அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு, ஒரு உன்னத இலட்சியம் உயிர் பெறும் ஒரு அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை; அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கின்றது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி விடுகின்றது.**



**வே. பிரபாகரன்**
**தமிழீழத் தேசியத் தலைவர்.**

## தப்பி ஓடிய 400 படையினர் 9 மாதங்களில் பொலிசாரால் கைது!

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தலைமறைவாகியுள்ள 400 பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்கள் கடந்த 9 மாதகாலப் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

இந்த 400 பேரில் 75 வீதமானவர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நாட்டில் சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்ட 60 ஆயிரம் ஆயுதங்கள் பொலிசார் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தப்பி ஓடிய படையினரைக் கைது செய்வதற்காகப் பொலிசார், முப்படைகளுடன் இணைந்து தேடுதல் வேட்டைகள் ஆரம்பித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மிருசுவில் மர்மம் தொடர்கிறது
## மீட்கப்பட்ட எலும்புகளை நீதிவான் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் மீட்கப்பட்ட மனித எலும்புகளை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பிரேம்சங்கர் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

சம்பவ இடத்தில் மனித மண்டை ஓடு உட்பட பல மனித எலும்புகள் இருக்கக் காணப்பட்டன. அத்துடன் உரப்பை ஒன்றில் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி மனித எலும்புகளும் அங்கே காணப்பட்டதாகவும் பகுதி எரிந்த நிலையில் சில எலும்புகளும், மண்ணில் புதைந்த நிலையில் சில எலும்புகளையும் அவதானிக்க முடிந்ததாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர். (க)

### கசிப்பு உற்பத்தியாளரை தேடும் அதிகாரிகள்

(ஊரெழு)

சுன்னாகம் பிரதேச மதுவரி உத்தியோகத்தர்கள் ஊரெழு கிழக்குப் பகுதியில் - கசிப்பு உற்பத்தி நிலையங்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் கசிப்பு உற்பத்தி, மற்றும் விற்பனை என்பன இரவு வேளைகளில் இடம் பெறுவதனால் - கசிப்பு பாவனையாளர்கள் கசிப்பைக் குடித்துவிட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக மதுவரி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (96)

## குடாநாட்டு விவசாய அபிவிருத்திக்கு இத்தாலிய நிறுவனம் உதவி வழங்கும்

(மானிப்பாய்)

இத்தாலியைச் சேர்ந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகிய 'மூவிமுண்டோ' யாழ்.மாவட்டத்தில் ஒன்பது பிரதேச செயலர் பிரிவுகளில், ஆயிரத்து 350 குடும்பங்களுக்கான விவசாய அபிவிருத்தித் திட்டத்தினை செயற்படுத்தி வருகின்றது. ஐரோப்பிய யூனியனின் உதவியுடன் 2 லட்சத்து 50 ஆயிரம் யூரோ நாணயப் பெறுமதியில் இத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

மூவிமுண்டோ முதற் தடவையாக தற்போது யாழ்ப்பாணத்தில், இலங்கை சர்வோதய சிரமதான இயக்கத்தினருடன் கூட்டிணைந்து இத்திட்டத்தினை அமுல் செய்கின்றது. இத்திட்டத்திற்கான பயனாளிகள் - கரவெட்டி, சாவகச்சேரி, தெல்லிபபளை, கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் விவசாய அமைப்புக்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு - விதை நெல், மரக்கறி விதை, மரக்கன்றுகள், மண்வெட்டிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், உரவகைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கும் இருவாரங்களுக்கு விவசாயப்பயிற்சி வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது. (100)

### ரமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.57 |
| சுபஹ் | 5.12 |
| உதயம் | 6.32 |
| லுஹர் | 12.27 |
| அஸர் | 3.49 |
| மஃரிப் | 6.20 |
| இஷா | 7.33 |

### ஆசிரியர்களுக்கு சதுரங்கப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் - யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு சதுரங்கப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் தனிநபர் போட்டியாகவும், ஆண் - பெண் ஆசிரியர்களுக்கு தனியாகவும் நடாத்தப்படவுள்ளதென்றும் இதில் பங்குபற்ற விரும்பும் சகல ஆசிரியர்களையும் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு இ.த.ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார்.

### கனரக வாகனங்களால் வீதி சேதம்

(மீசாலை)

மீசாலை வடக்கு தட்டான்குளம் ஆலயத்திற்கு முன்னால் உள்ள பிரதான வீதியை ஊடறுத்து படையினரின் கனரக வாகனங்கள் செல்வதனால் வீதி பெருமளவில் சேதமடைந்துள்ளது.

மேற்படி பகுதிகளினூடாக இராணுவ வாகனங்கள் சென்றதனால் வீதிகளில் ஏற்பட்ட குழிகளை மக்கள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு செப்பனிட்டபோதும் - மீண்டும் அப்பாதையால் கனரக வாகனங்கள் செல்வதனால் வீதிகள் சேதமடைந்துள்ளன.

மழைக்காலங்களில் இக்குழிகளில் நீர் தேங்கி நிற்பதனால் மக்கள் போக்குவரத்தின்போது பலத்த சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. (25)

## இலங்கைக்கான 45 வீத உதவியை ஜப்பானிய அரசாங்கம் வழங்கும்!

(ரோக்கியோ)

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் 45 சதவீதமான நிதியுதவியை வழங்கவிருக்கும் ஜப்பான், இலங்கைக்கான மிகப்பெரும் உதவி வழங்கும் நாடாகத் திகழ்கின்றது.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூடடத்தைத் தவிர மற்றுமொரு பெரும் நிதியுதவி மாநாடொன்றை அடுத்த வருட ஆரம்பத்தில் ரோக்கியோவில் நடத்தவும் ஜப்பான் தீர்மானித்துள்ளது.

இதேவேளை - அவுஸ்திரேலியா, 7.5 மில்லியன் அவுஸ்திரேலியன் டொலர்கள் நேரடி உதவியுடன் மொத்தமாக 9 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை நிதியுதவியாக வழங்கவுள்ளது.

### குடத்தனையில் இலவச கணினி நிலையம் திறப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட இலவச கணினி நிலையத் திறப்பு விழா - இன்று காலை 10 மணிக்கு குடத்தனை தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு மாணவரிடையே கணினி அறிவை விருத்தி செய்யும் நோக்கில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (23)

### 1500 இலங்கையருக்கு இத்தாலியில் வேலை வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த 1500 இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க இத்தாலிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இத்தாலித் தூதுவருடாக, தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு இத்தாலிய அரசின் இணக்கம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூரில் அமைக்கப்படும் தியாகி திலீபன் நினைவுத் தூபி

**நல்லூர் கந்தசாமி கோவிலுக்குப் பின் வீதியில் தியாகி திலீபனின் நினைவுத் தூபியொன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.**

**கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி இவ் நினைவுத் தூபிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.**

**முன்பு இதே இடத்தில் தியாகி திலீபனின் நினைவுத்தூபி இருந்ததும், அதனைப் படையினர் சேதமாக்கியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.**



### புதிய குருக்கள் நியமனம்

(மானிப்பாய்)

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் அவர்களினால் மேலும் மூன்று குருக்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அருட்திரு.எம்.வி.ஈ.ரவிச்சந்திரன் அடிகள் சாவகச்சேரி பங்குத்தந்தையாகவும், அருட்திரு.எம்.எக்ஸ்.கருணாரட்ணம் யாழ். மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுத் தலைவராகவும், அருட்திரு ஆர்.ஸ்ரலின் யாழ். மறைமாவட்ட காணி சம்பந்தமான விவகாரங்களுக்கு பொறுப்பாகவும் ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார். (100)

### நத்தார் தின நிகழ்வுகள்

நவீல்ட் பாடசாலையின் வருடாந்த நத்தார் தின நிகழ்வுகள் நாளை காலை 10 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி பெற்ரோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### பருத்தித்துறை கடற்கரையில்
## மணல் ஏற்றிய படையினரை தடுத்து நிறுத்திய பொதுமக்கள்

பருத்தித்துறை கரையோரப் பகுதியில் படையினர் மண் ஏற்றுவதற்கு அப்பகுதி மக்கள் தடைவிதித்துள்ளனர்.

மழையினால் சேதமடைந்த காவலரண்களை மீண்டும் கட்டுவதற்காக உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிக்கொண்டிருந்தபோது, அப்பகுதியில் கூடிய மக்கள், இப்பகுதியில் தினமும் மணல் ஏற்றுவதால் கடல் நீர் உள்ளே வருவதாக கூறி மணல் ஏற்றுவதைத் தடுத்தனர்.

இதனால் படையினருக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டதை அடுத்து ஒருமுறை மட்டும் மண் ஏற்ற மக்கள் அனுமதித்தனர்.

இதனை அறிந்து அப்பகுதிக்கு வந்த பொலிசார் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டனர். (23)

### கோப்பாயில் பாலர் விடுதி அமைப்பது தாமதம்

(மல்லாகம்)

சிறுவர் நன்நடத்தை திணைக்களத்தினால் கோப்பாய் பாலர் பகல் விடுதி அமைப்பதற்காக 2002 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முடிவடைந்ததால் புனரமைப்பு வேலைகள் தாமதமடைந்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் 2003 இற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து இக்கட்டடத்தை முழுமை பெறச் செய்யுமாறும், குறைநிலையில் இருக்கும் புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்தி பூரணப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (68)

# புதிய சீனத் தலைவராக ஹு ஜின்ரோ; ஜியாங் தொடர்ந்தும் வலுமிகுந்த பதவியில்!

## உலகவலம்

(பீஜிங்)


ஹு ஜின்ரோ

இன்று நிறைவடையவுள்ள கம்யூனிசக் கட்சியின் பதினாறாவது தேசிய மகாநாட்டில் முன்னை நாள் உப தலைவர்-ஹு ஜின்ரோ(HU-Jintao) நாட்டின் புதிய அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் சீனக் கம்யூனிசக் கட்சியின் மத்திய குழு, ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டதாக விரிவாக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது தெரிவு செய்யப்பட்டிருக்கும் தலைவர் ஹு ஜின்ரோ, 59 வயது நிரம்பிய புதிய தலைமுறையைச் சேர்ந்தவர் என்பதுடன் கல்விப் பின்னணியும் வியாபார தொழில் முயற்சிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதுடன் சமத்துவமற்ற சமுதாயத்திற்கு எதிராக தீவிரமாக செயற்படக்கூடியவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர் பத்திரிகையாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில் - "நாளைய சீனா நிச்சயமாக முன்னேற்றகரமானதாக இருக்கும்" என உறுதியளித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் - தனது தலைமைத்துவத்திற்கு வேண்டிய அனைத்து அடித்தள வேலைகளையும் ஜியாங் செமின் இட்டுள்ளார் என்றும், சீனக் கம்யூனிசக் கட்சி மிகவும் சுமுகமாக- பழைய தலைமுறையிலிருந்து புதிய தலைமுறையினருக்கு கைமாறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- ஜியாங் செமினின் செல்வாக்கு சீன அரசியலில் எந்தளவுக்கு குறைந்துள்ளது என்பது கேள்விக்குரியது என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கட்சியின் மத்திய குழுவில் செமின் தனக்கு மிகவும் நம்பிக்கையாகவுள்ளவர்களில் மூவரை நியமித்துள்ளதாகவும், இதனால் புதியவர் ஹுவினது கொள்கை வகுப்புக்களில் செமின் செல்வாக்குச்செலுத்த முடியும் என்றும் நம்பப்படுகிறது.

அத்தோடு - ஜியாங் செமினே தொடர்ந்தும் சீன அரசியலில் மிகவும் சக்தி வாய்ந்த இராணுவ ஆணைக்குழுவிற்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சீனாவின் இராணுவத்தை முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொறுப்பு இந்த இராணுவ ஆணைக்குழுவையே சாரும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


தியான்மென் சதுக்கமருகே சீனப் பொலீசார்.

# சி.ஐ.ஏ. அதிகாரிகளை கொலைசெய்த பாகிஸ்தானியருக்கு மரணதண்டனை!

(வொஷிங்டன்)

அமெரிக்காவின் வேர்ஜினியா மாநிலத்தில் இரண்டு சி.ஐ.ஏ அதிகாரிகளைக் கொன்ற குற்றத்திற்காக பாகிஸ்தானிய பிரஜை ஒருவர் விஷஊசி மூலம் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

அய்மல கான் கான்சி என்ற இந்த 38 வயது பாகிஸ்தானிய பிரஜை, 1993இல் வேர்ஜினியாவிலுள்ள சி.ஐ.ஏ அலுவகத்தில் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு சி.ஐ.ஏ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

மரணதண்டனைக்குள்ளாக்கப்படுவதற்கு சற்றுமுன்னர் பி.பி.ஸியின் உருதுமொழி ஒலிபரப்புக்கு பேட்டியளித்த அவர் - மத்தியகிழக்கு மீதான அமெரிக்காவின் முஸ்லிம் எதிர்ப்புணர்வின்பால் ஏற்பட்ட கோபத்தினாலேயே தான் இத்தாக்குதலை நடாத்தியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாகிஸ்தான் தலைநகர் ஹைதராபாத்தில் நடந்த பஸ் குண்டுவெடிப்பொன்றில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கும், குறிப்பிட்ட பாகிஸ்தான் பிரஜை மீதான மரணதண்ட னைத் தீர்ப்புக்கும் தொடர்புள்ளதா என பாகிஸ்தானிய அதிகாரிகள் ஆராய்கின்றனர்.

இது இவ்வாறிருக்க தனது தண்டனை நிறைவேற்றப்பட்டு சுய உணர்வு ஏற்படும் வரையில் - அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை எனக் கான்சி தொடர்ந்து கூறிவந்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.


கான் கான்சி

# அமெ. ஜனநாயகக் கட்சியிலிருந்து பெண் தலைவர் தெரிவானார்!

(வோஷிங்டன்)

இம்மாத ஆரம்பத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில் முதன்முறையாக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நன்சி பில்லோசி (Nancy Pelosi) என்ற பெண் பாராளுமன்ற உறுப்பினர், பிரதிநிதிகள் சபைக்குத் தெரிவாகியுள்ளார்.

தாராளவாதக் கொள்கையைக் கொண்ட நன்சி தான் மிகவும் கௌரவிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

கட்சியிலும் காங்கிரஸ் சபையிலும் மிசூரி மாநிலத்தை சேர்ந்த ரிச்சாட் ஜிப்ஹாட்டின் பின்னர்- சான்பிரான்சிஸ்கோவில் இருந்து நன்சி தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நன்சி மிகவும் வெளிப்படையாகவே பேசவல்லவர். ஜோர்ஜ் புஷ் அரசாங்கம் ஈராக்கின் மீது கொண்டுள்ள நிலைப்பாட்டை மிகவும் வெளிப்படையாகவே அவர் விமர்சித்துள்ளார். இவ்விமர்சனம் பற்றி அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகையில் - மிகவும் தாராளவாதக் கொள்கையை உடைய பெண்மணி ஜனநாயகக் கட்சியை வழிநடத்த இருப்பது குறிப்பிடத்தக்கதாகும் எனத் தெரிவித்துள்ளனர்.


நன்சி பில்லோசி

அதேவேளை- ஜனநாயகக் கட்சியின் கொள்கைகளுக்கும் மிகவும் தீவிரம் கொண்ட குடியரசுக் கட்சியின் கொள்கைகளுக்கும் இடையில் பாரிய வேறுபாடு எதிர்காலத்தில் உருவாகுமென்றும் அவதானிகள் மத்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

# நேபாளத்தில் பெரும் இரத்தக் களரி; பொதுமக்கள் பலர் சூட்டுக்குப் பலி!

## மாவோ போராளிகளின் தாக்குதல் வேகம் கொள்கிறது

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோ போராளிகளின் தாக்குதலிலும் படையினரின் திருப்பித்தாக்குதலிலும் பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மிகவும் ஒதுக்குப் புறம்பான மலைப்பிரதேச நகரான ஹலங்கா (khalanga)வில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. அதேவேளை நூற்றுக் கணக்கான மாவோ போராளிகள் வடமேற்கு ஜம்லா (jumla) மாநிலத்தில் பொலிஸ் நிலையங்களைத் தாக்கியுள்ளனர். நேபாளப் படையினரின் திருப்பித் தாக்கியதாலும், போராளிகள் இரவுபூராகவும் துப்பாக்கி பிரயோகத்தினை கண்மூடித்தனமாக மேற்கொண்டதாலும் பொதுமக்கள் பலர் பலியானதாகத் தெரியவருகிறது.

நேபாளத்தில் கடந்த 6 வருடங்களாக நடைபெறும் வன்செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக ஒரு வாரகால பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு போராளிகள் அழைப்பு விடுத்ததன் பின்னர் இத் தாக்குதல்களை நடநதிருக்கின்றன.

# உயர் பாதுகாப்பு வலயப் பாதிப்பு விபர அட்டவணை

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாகப் பொதுமக்கள் வாழ்வில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். தாய்லாந்து பேச்சு வார்த்தையின் போதும் அதிகநேரம் விவாதிக்கப்பட்ட விடயங்களில் இதுவும் ஒன்று. இப்பாதிப்புக்கள் தொடர்பாக இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் சுருக்க அட்டணையை இங்கே தருகின்றோம்.

| இல. | விபரம் | நீலங்காடு | ஊருண்டி | வேலணை | மண்டைதீவு | ஞானம் விடுதி | கிழக்கரியாலை | தனங்களப்பு | எழுதுமட்டுவாள் | அம்பன் | பல்லப்பை | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | தெல்லிப்பளை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் | | | | | | | | | | | |
| 1. | வலயத்தின் பரப்பளவு (ச.கி.மீ) | 1.25 | 0.75 | 0.25 | 08 | 0.15 | 12 | 25 | 34.5 | 12.5 | 0.15 | 0.5 | 0.1 | 49 | 144.15 |
| 2. | இராணுவப்பிரிவு | P | Q | Q | R | S | S,T | U | V | .... | W | W | W | X,Y | .... |
| 3. | முன்பு குடியிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை | 150 | 202 | 61 | 557 | 125 | 2450 | 709 | 687 | 551 | 10 | 50 | 20 | 24816 | 30388 |
| 4. | முன்பு இருந்த வீடுகளின் எண்ணிக்கை | 150 | 152 | 50 | 498 | 110 | 1970 | 715 | 687 | 536 | 10 | 38 | 15 | 24594 | 29525 |
| 5. | தற்போது மக்கள் வசிப்பார்களாயின் குடும்பங்களின் எண்ணிக்கை | ..... | ...... | ..... | 60 | .... | 155 | 85 | 36 | .... | ..... | .... | .... | 06 | 286 |
| 6. | இங்கிருந்து இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை | 200 | 98 | 61 | 553 | 125 | 2296 | 624 | 651 | 551 | 10 | 50 | 20 | 18939 | 24178 |
| 7. | இவ்வலயம் கொண்டுள்ள கி.சே. பிரிவுகளின் எண்ணிக்கை | 03 | 01 | 02 | 02 | 01 | 06 | 03 | 03 | 04 | 02 | 01 | 01 | 38 | 67 |
| 8. | இதனுள் முடக்கப்பட்டுள்ள உற்பத்திக்கேற்ற நிலவிபரம் | 05 | 25 | 17 | 320 | .... | 01 | 2689 | 440 | 294 | 03 | .... | .... | 8465 | 12259 |
| 9. | இதனால் பாதிப்படைந்துள்ள விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை | 03 | 10 | 68 | 127 | .... | 275 | 516 | 483 | 137 | 10 | .... | .... | 14398 | 16027 |
| 10 | இதனுள் முடக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 03 | 02 | .... | .... | .... | 05 | ..... | .... | 01 | ..... | 05 | .... | 24 | 40 |
| 11 | இதனால் பாதிப்படைந்துள்ள தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை | 165 | 72 | .... | .... | .... | 420 | .... | ..... | 46 | ..... | 07 | .... | 960 | 1670 |
| 12 | இவ்வலயத்தால் பயனற்றிருக்கும் கடற்கரையின் தூரம் | 04 | 04 | .... | 12 | .... | 10 | 11 | 04 | 05 | .... | 01 | 0.5 | 30 | 81.5 |
| 13 | இனதால் பாதிப்படைந்துள்ள மீனவர் குடும்பங்களின் எண்ணிக்கை | 77 | 142 | .... | 373 | .... | 543 | 291 | 135 | 226 | .... | 50 | 25 | 2574 | 4436 |
| 14 | மக்கள் செல்ல முடியாத ஆலயங்களிள் எண்ணிக்கை | 04 | 01 | .... | 01 | .... | 10 | 20 | 07 | 15 | 01 | 05 | 02 | 180 | 246 |
| 15 | மக்கள் செல்ல முடியாத பாடசாலைகள் எண்ணிக்கை | .... | .... | ..... | 01 | .... | 04 | 02 | 04 | 03 | .... | 02 | .... | 31 | 47 |

1. எலாரா (கடற்படை) - P
2. கஞ்சதேவா (கடற்படை) - Q
3. வெலிசுமண (கடற்படை) - R
4. 512 - S
5. 514 பிரிகேட் - T
6. 521 பிரிகேட் - U
7. 55 பிரிகேட் - V
8. 524 பிரிகேட் - W
9. கடற்படை - X
10. தரைப்படை - Y

# சிறுவர் அரங்கம்



## வார்த்தை விளையாட்டு – 07




முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

☆ வார்தை விளையாட்டில் இம்முறை உங்களுக்குப் பிடித்தமான மிருகங்களும் பறவகளும் மட்டுமே இடம்பெறுகின்றன. அவற்றைக் கண்டுபிடித்து கட்டங்களை நிரப்புங்கள் பார்க்கலாம்.

### இடமிருந்து வலம்

1. விலங்குகளின் ராஜா.
4. கிளைக்குக் கிளை தாவும் மிருகம்.
9. வேகமாக ஓடும் மிருகம்.
10. பலம்கொண்ட மிருகம்.
11. பறவைகளின் அரசன் எனச் சொல்லப்படும்.
12. பேசக் கூடிய பறவை.

### மேலிருந்து கீழ்

2. மூன்றெழுத்து மிருகம்.
3. தந்திரமான மிருகம்.
5. சவாரி செய்யப் பயன்படும்.
6. அழகான ஆடும் பறவை.
7. இனிய குரல் பறவை.
8. வளர்ப்புப் பிராணி.
9. பால் தரும் மிருகம் (கீழிருந்து மேலாக)

### *வார்த்தை விளையாட்டு - 6 இன் விடைகள்*

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1.வானொலி | 7.பலா | 1.வான்கோழி | 5.விடுகதை |
| 3. எரு | 8.கதி | 2. கலி | 8.கபடி |
| 4.கல்வி | 10.கோயில் | 3.எல்லாளன் | 9.தை |
| 6.கோடி | | | |

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 20-11-2002

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 06

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
செல்வன் சஅுஸ்வத்தன்
இல.150, சில்வா றோட்,
வட்டக்கச்சி.

*2ஆம் பரிசு -*
தனுஸ்கோடி வாகீசன்
3 ஆம் வட்டாரம், நெடுந்தீவு தெற்கு,
நெடுந்தீவு.

*3ஆம் பரிசு -*
சிவராஜா கஜேந்திரன்
கற்கோவளம்,
பருத்தித்துறை.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## தீயவரின் தொடர்பு



விவசாயி ஒருவன் வயல் வழியால் வந்து கொண்டிருந்தான். வரும் வழியிலே ஒரு பாம்பு அடிபட்டு மயங்கிக் கிடப்பதைக் கண்டான். பாம்பைப் பார்த்து அவன் இரக்கம் கொண்டான். அதற்கு உதவ நினைத்தான்.

அந்தப் பாம்பை நிலத்திலிருந்து தூக்கினான். தனது நெஞ்சோடு அதை வைத்து தடவினான். அவனது நெஞ்சுச் சூடு பட்ட பாம்பு மெல்ல மெல்லச் சுகம் அடைந்தது. விவசாயியும் அன்போடு அதைத் தடவிக்கொண்டிருந்தான் . முற்றிலும் சுகம் அடைந்த பாம்பு மெல்லத் தலையை உயர்த்தியது. அடுத்த கணமே அது அந்த மனிதனின் நெஞ்சில் சட்டென்று கொத்திற்று.



கொஞ்ச நேரத்தில் பாம்பின் நஞ்சு உடலில் பரவி அந்த விவசாயி இறந்து போனான்.

## *வேட்டை வேந்தன்* அங்கம் - 3

தமிழில்- தி.தவபாலன்
நன்றி - ரிங்கிள்



## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சீ.மேரி ஜீவனா
கற்கும் பாடசாலை :-
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை.
கற்கும் தரம் :- 06
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், கணினித் துறை.



முழுப்பெயர்:-
அல்பிரட் அலெக்ஸ்
கற்கும் பாடசாலை :-
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.
கற்கும் தரம் :- 07
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு,
சித்திரம் வரைதல்



முழுப்பெயர் :-
ரங்கா சந்திரகாந்தன்
கற்கும் பாடசாலை :-
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
கற்கும் தரம் :- 07
ஆர்வமுள்ள துறைகள் :-
தமிழ், கணிதம்,
விளையாட்டு.



முழுப்பெயர்:-
ஞானேஸ்வரன் கபிலன்
கற்கும் பாடசாலை :-
யா/மகாஜனாக் கல்லூரி.
கற்கும் தரம் :- 03.
ஆர்வமுள்ள துறைகள் :-
வீட்டுத்தோட்டம், சித்திரம்



முழுப்பெயர் :-
பிருந்தா ஞானேஸ்வரன்
கற்கும் பாடசாலை :-
யா/மகாஜனாக் கல்லூரி.
கற்கும் தரம் :- 07
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், பத்திரிகை வாசித்தல்.

# வௌவால்கள்

## சில அதிசயத் தகவல்கள்

மரங்களில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் வௌவால்களைப் பார்த்திருப்பீர்கள். சின்னஞ்சிறிய வௌவால்களில் இருந்து பெரிய காக வௌவால்கள் வரை இங்கு காணலாம்.

இந்த வௌவால்களைப் பற்றிய சில தகவல்களை அறிந்து கொள்வோமா?

வௌவால்கள் பாலூட்டி வகையைச் சேர்ந்தவை. ஆனால் பாலூட்டிகள் பறப்பதில்லையாயினும் வௌவால்களுக்கு மட்டும் பறக்கக்கூடிய வல்லமை உள்ளது.

குறுகிய முகமும் சிறிய உருவமும் வௌவால்களின் தனிச் சிறப்பாகும். உருவம் சிறிதானாலும் இவற்றின் இறகுகள் பெரியவை என்பதால் பெரிய தோற்றத்தைக் காட்டுகின்றன. சிறிய இன வௌவால்களின் பிரதானமான உணவு பெரும்பாலும் பூச்சிகள்தான்.



உங்கள் வீட்டுப் பழமரங்களில் உள்ள பழங்களைத் தின்பவை பெரிய இன வௌவால்கள்தான். இவற்றுக்கு நீண்ட முகமும் இருக்கும். இவற்றில் இறகுகளை விரித்தால் 4 அடி நீளமாக இருக்கும்.

வௌவால்களுக்கு இரவில்தான் நன்றாகக் கண் தெரியும். அதனால் பகலில் மரங்களில் நன்றாகத் தூங்கிவிட்டு, இரவில் இரை தேடக் கிளம்பி விடுகின்றன.

பகலில் நேரடியாக சூரியஒளி படும்போது வௌவால்களின் கண்கள் கூச்சமடைகின்றன. இதனால் பகலில் உலாவுவதைத் தவிர்த்துக் கொள்கின்றன.

வௌவால்களில் ஆயிரத்துக்கும் அதிகமான வகைகள் இருக்கின்றன. பூவில் இருக்கும் மகரந்தத் தேன், பழம், தவளை, மீன், பல்லி, இவற்றை மட்டுமன்றி வௌவால்களையே பிடித்துத் தின்னும் வௌவால் இனங்களும் உலகில் இருக்கின்றன.



மூன்று வகையான வௌவால்கள், விலங்குகளின் உடலில் காயத்தை ஏற்படுத்தி இரத்தம் குடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு "இரத்தக் காட்டேரி வௌவால்" (**Vampire bat**) என்று பெயர்.

தாய் வௌவால்கள் பெரும்பாலான நேரத்தை குழந்தைக்குப் பாலூட்டவே செலவிடுகின்றன. இவற்றைவிட இன்னொரு அதிசய செய்தி - ஒரு வௌவால் குட்டியின் தாய் இறந்து விட்டால் அதை இன்னொரு தாய் தத்தெடுத்து வளர்க்கும். மனிதன் போன்ற அபூர்வமான குணம் அதற்கும் இருக்கின்றது.

## MY Self

1.My name is Thanya.
2.I live at Inuvil.
3.I am seven years old.
4.I have one sister.
5.I study at J/Inuvil Central College.

*Thanya Kannaperan.*
*J/Inuvil Central College*
*Grade 2B.*

## அழகான சின்ன தேவதை



ஏ.இனோஜா,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## எங்கள் வீட்டு நாய்க்குட்டி

எங்கள் வீட்டு நாய்க்குட்டி
வெள்ளை நிற நாய்க்குட்டி
வீரம் உள்ள நாய்க்குட்டி
வேட்டைக்கார நாய்க்குட்டி

மீனும் சோறும் தின்னும்
மின்னி மின்னி பார்க்கும்
வீர நடை நடக்கும்
விளையாடி மகிழும்

சி-ஜெனமோகன்
தரம் 8B
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## விடுகதைகள்

1. எல்லையில்லாத வலையிலே எண்ண முடியாத மீன்கள்?
2. ஆளில்லா வீட்டுக்கு வாய் பேசாக் காவல்காரன்?
3. வீட்டுக்குள் வீடு கட்டி வீட்டையே கொள்ளையடிக்கும் அது என்ன?
4. நன்னுவார் தின்னமாட்டார். அவர் யார்?
5. பூப்பார். காய்ப்பார். கலகலப்பார் ஆனால் காகம் இருக்கக் கோப்பில்லை அது என்ன?
6. பக்கமெல்லாம் பட்டையுண்டு. மரமல்ல. பெயர்த்தெடுத்தால் முத்துண்டு . சிப்பியல்ல. உடைத்தெடுத்தால் விதையுண்டு. பழமல்ல. அது என்ன?
7. ஆயிரம் தச்சர் கூடி அமைத்த ஒரு மண்டபம். ஒருவன் கண்பட்டு உடைந்தது. அந்த மண்டபம் எது?
8. தலையுண்டு வாலில்லை. உடம்புண்டு காலில்லை. தட்டச் சீறும் பாம்பு அல்ல. அது என்ன?

### விடைகள்

8. நெருப்புக் குச்சி
7. தேன்கூடு
6. சோளம்
5. நெல்
4. பாக்குவெட்டி
3. எலி
2. பூட்டு
1. நட்சத்திரம்

*அ.அனிஸ்ரன்*
*தரம்-1*
*யா/புனித பத்திரிசியார் கல்லூரி*

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................

........................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இரட்டைப் பெயர்கள்

| முதன் நிலைப் பெயர் | இரட்டைப் பெயர் |
|---|---|
| நியூசிலாந்து | தென்னுலக பிரிட்டன் |
| சான்பிரான்ஸிஸ்கோ | பொற்கதவு நகரம் |
| அமிர்தசரஸ் | பொற்கோயில் நகரம் |
| ஒக்ஸ்போர்ட் | கனவுக்கோபுர நகரம் |
| ரோமாபுரி | அழியாநகரம் |
| பெல்ஜியம் | ஐரோப்பாவின் உதைபந்தாட்ட மைதானம் |
| ஆபிரிக்கா | இருண்ட கண்டம் |
| அயர்லாந்து | மரகதத்தீவு |
| பெங்களூர் | இந்தியாவின் பூந்தோட்டம் |
| பாலஸ்தீனம் | புனிதபூமி |
| பஹ்ரைன் | முத்துத்தீவு |
| ஜிப்ரால்டர் | மத்தியதரைக்கடலின் திறவுகோல் |
| அவுஸ்திரேலியா | கங்காரு நாடு |
| பர்மா | பொற்கோபுர நாடு |
| கொரியா | அதிகாலை அமைதி நாடு |
| பின்லாந்து | ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு |
| தாய்லாந்து | வெள்ளை யானை நாடு |
| கியூபா | சர்க்கரைக் கிண்ணம் |
| சிகாகோ | புயலடிக்கும் நகரம் |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று.

- திருக்குறள்

## நமது நோக்கு

# அரசியல் சுயலாபமே குறி!

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களினூடாக இயல்புநிலையை மீளக் கொண்டுவர முயற்சிக்கும் இவ்வேளையில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தரப்பிலிருந்து வெளியாகும் செய்திகள், அமைதி முயற்சிகளை சீர்குலைத்துவிடும் தன்மையானதாகவும், ஓரளவு அடங்கிப் போயிருக்கும் சிங்கள பௌத்த இன வாதத்தினைச் தூண்டிவிடுவதாகவும் அமைந்துள்ளன. சமாதானப் பேச்சுக்களின் வழியாக, தாய்லாந்தில் எட்டப்பட்ட இணக்கத்திற்கமைவாக - விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் பங்கேற்கும் உபகுழுக்கள் அமைக்கப்பட்டு, அவை சர்வதேச அங்கீகாரத்துடனும் ஆதரவுடனும் - தமது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் -

தான் ஒரு தனிவழியைப் பின்பற்றப்போவதாகவும், அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய கவுன்சிலை அமைக்கப்போவதாகவும் - இக்கவுன்சில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை ஆராயும் என்றும் - நாட்டு மக்களுக்கான தனதுரையில் ஜனாதிபதி சந்திரிகா அறிவித்திருந்தமை பல தரப்பிலும் கடும் விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

ஆக்கபூர்வமான சமாதான முயற்சிகள் ஒரு புறத்தில் முன்னெடுக்கப்படும்போது, தேவையற்ற பிரச்சினைகளைக் கிளப்பும் விதமாகவும், சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையிலும் ஜனாதிபதியின் அறிவிப்பு அமைந்திருக்கிறது.

தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளின் பங்கேற்பினை, திட்டமிட்ட வகையில் முக்கியத்துவமிழக்கச் செய்ய, ஏனைய கட்சிகளையும் அழைத்து - சமாதானப் பேச்சுக்களின் நகர்வுப் போக்கினையே சிதறடிக்கச் செய்யுமுகமாகவும், அமைதிநிலையைக் குழப்பி - அதில் தனக்கான அரசியல் ஆதாயம் தேடுவதாகவுமே - ஜனாதிபதியின் அறிவிப்பு அமைந்திருக்கின்றது.

உண்மையில் சமாதானத்தின் பேரில் - விசுவாசமான நம்பிக்கை வைத்திருப்பவராக அவர் இருந்தால் - கடந்த ஆட்சிக்காலத்தில் அவர் இத்தகைய அறிவிப்பு ஒன்றினை விடுத்து - அமைதி முயற்சிகளில் தீவிரம் காட்டியிருக்கலாம்.

ஆனால் - ஜனாதிபதி சந்திரிகா அப்போது போரினை கண்மூடித்தனமான வகையில் நடாத்தி, நாட்டையே குட்டிச்சுவராக்க முனைந்ததுடன் - விடுதலைப் புலிகள் விடுத்த சமாதான அழைப்புக்களை நிராகரிக்கவும் செய்தார்.

இதனால் - அவரைப் பதவியில் இருத்திய மக்களாலேயே அவரது அரசாங்கம் தூக்கியெறியப்பட்டதுடன், இன்று - தனக்கான அரசியற் தளத்தைத் தக்கவைப்பதிலும் அவர் ஆட்டம் கண்டு வருகின்றார்.

இந்த நிலையில் - கடந்த காலங்களில் சிங்கள அரசியல் தலைமைத்துவங்கள், தமக்கான இறுதி ஆயுதமாகப் பயன்படுத்தி வந்த இனவாதத்தை - தனது அரசியல் சுயநலத்துக்காக பயன்படுத்த முனைபவராக ஜனாதிபதி சந்திரிகா உருக்கொண்டு வருகின்றார்.

தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி - எவ்வகையிலேனும் சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடுவது என்று கங்கணங்கட்டி நிற்கும் ஜனாதிபதிக்கு - அரசாங்கத் தரப்பிலிருந்து, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வழங்கிய பதில் - அவருக்கு தற்போதைக்கு தகுந்த பதிலாக அமைந்திருக்கின்றது.

தேசிய கவுன்சில் என்ற ஜனாதிபதியின் யோசனையை அரசாங்கம் நிராகரிப்பதாகவும், விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் நடாத்தும் பேச்சுக்களிலேயே முடிவு காணப்படுமென்றும் - அவர் அறிவித்திருப்பது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஒரு நேரடியான தாக்குதலாக அமைந்துவிட்டதென்றே கொள்ளலாம்.

ஆனால் - இத்தகைய நிலைப்பாடுகள் ஜனாதிபதி சந்திரிகாவை அடக்கிவிட்டுவிடும் என்றும், அவர் தணிந்து இணங்கிப்போவார் என்றும் வாளாவிருந்துவிடமுடியாது.

தனக்கான அரசியல் அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு - அவர் நிச்சயம் இன்னுமொரு வழியில் தனது ஊடுருவலை நிகழ்த்தவே முனைவார்.

நாட்டினுடைய சுபீட்சமோ, நாட்டு மக்களுடைய நல்வாழ்வோ அவரது எண்ணத்திற்குட்படாதவரை - அவரது வரம்புமீறிய நடவடிக்கைகளும், குழப்பவாதச் சிந்தனைகளும் தென்னிலங்கை அரசியலில் அடிக்கடி இவ்விதம் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கும்.

---

### தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்குச் செல்வோர்

# அதிபரின் முன் அனுமதியுடன்தான் காவலரணைத் தாண்ட முடியும்!

(சுன்னாகம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குச் செல்லும் பழைய மாணவர்கள் - பாடசாலை அதிபரிடம் முன்னனுமதி பெற்ற கடிதத்துடன் வந்தால்மட்டுமே பாடசாலைக்குச் செல்ல படையினரால் அனுமதிக்கப்படும் புதிய நடைமுறையொன்று அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையால் நேர்முகப்பரீட்சைக்குச் செல்வதற்காக பாடசாலை விடுகைப்பத்திரம், பிறப்புச்சான்றிதழ், நற்சான்றிதழ் போன்ற முக்கிய ஆவணங்களை பெறச்செல்பவர்கள் திருப்பி அனுப்பப்படுவதால் - அவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

முன்னர் இப்பாடசாலைக்குச் செல்லும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் - இராணுவ காவலரணில் அடையாள அட்டையை ஒப்படைத்துவிட்டு பாடசாலைக்குச் செல்வதே நடைமுறையாக இருந்தது.

இந்நிலையில் புதிதாக கொண்டுவரப்பட்ட நடைமுறையை நீக்கி - சிறைவைக்கப்பட்டுள்ள பாடசாலையின் செயற்பாட்டை சீர்படுத்த அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் முன்வர வேண்டுமென பழைய மாணவர் சங்கத்தினர் கேட்டுள்ளார்.

(87)

# சாவகச்சேரி, மீசாலைப் பகுதிகளுக்கு ஜெனரேற்றர் மூலம் மின்சாரம்!

(மீசாலை)

சாவகச்சேரி, மீசாலைப் பகுதிகளுக்கு இம்மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மின் வழங்குவதற்கான ஜெனரேற்றர்கள் சாவகச்சேரி பழைய பிரதேச செயலகத்திலும், மீசாலை - புத்தூர் சந்தியிலும் பொருத்தப்பட்டு மின்விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை - மின்கம்பத்திலிருந்து வீடுகளிற்குச் செல்லும் வயர்கள் யுத்த காலத்தின்போது சேதமடைந்துள்ளன. அதற்கான வயர்களை மின்சார சபை வழங்க மறுத்ததையடுத்து -அப்பகுதி மக்கள் கூட்டாகச்சேர்ந்து, வீடுகளுக்கான இணைப்பு வயர்களை மின்சார சபையே வழங்கக் கோரி மகஜர் ஒன்றை மின்சார சபையிடம் கையளித்துமுள்ளனர்.

# உடற்குறைபாட்டுடன் பிறக்கும் பத்து வீதமான குழந்தைகள்!

## சுகாதார அமைச்சக அதிகாரியின் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் பத்து சதவீதமான குழந்தைகள் உடற்குறைபாட்டுடனேயே பிறப்பதாக சுகாதார அமைச்சின் உயர் மருத்துவ அதிகாரி தீப்தி பெரேரா அதிர்ச்சியான தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.

இவர்களில் ஒரு சிலருக்கு மட்டுமே தகுந்த சமயத்தில் தேவையான உதவிகள் கிடைக்கப்பெறுவதாகத் தெரிவித்த அவர் -

உடற்குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு உதவுவதற்கான தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்க அரசாங்கம் தவறிவிட்டதாகவும் ஒத்துக்கொண்டார்.

குறிப்பிடத்தக்க சதவீதமான குழந்தைகள் இவ்விதம் உடற்குறைபாட்டுடன் பிறப்பதற்கான மருத்துவக் காரணங்கள் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வங்கியின் மூலம் கடன் வசதி!

## சமாசம் நடவடிக்கை

(மானிப்பாய்)

கடந்த காலத்தில் யுத்த நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன், வடமாகாண கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடனடிப்படையில், வங்கி ஊடாக வெளியிணைப்பு இயந்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 20 மீனவர்களுக்கு ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 675 ரூபா பெறுமதியான 20 வெளி இணைப்பு இயந்திரங்கள் தனியார் வங்கியூடாக தற்சமயம் வழங்கப்பட்டுள்ளன.

இப்பணம் இரு வருடங்களுக்குரிய கடனடிப்படையில் வழங்கப்பட்டதாகும். அநேகமான மீனவர்கள் கடனடிப்படையில் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பெற்றுத் தருமாறு சமாசத்திடம் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக மேலும் 20 மீனவர்களுக்கு வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்குவதற்கான முயற்சியில் சமாசம் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை இன்னொரு தனியார்வங்கியும் மீனவர்களுக்கு கடனடிப்படையில் உதவிசெய்ய முன்வந்துள்ளதாகவும், எந்தமாதிரியான உதவி தேவையென்பதை அறியத்தருமாறும் அவ்வங்கியினால் கோரப்பட்டுள்ளது.

(100)

# கட்டைவேலி கூட்டுறவுச் சங்கத்தில் இலகு கடனில் தையல் மெசின் வழங்கல்

கட்டைவேலி நெல்லயடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பாஸ்கரன் தம்பதியினரின் அன்பளிப்பு நிதியிலிருந்து - சுழற்சிமுறை இலகு கடன் அடிப்படையில் 12 பயனாளிகளுக்கு தையல் மெசின்களை வழங்கும் விழா நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பட்டயக் கணக்காளர் அ.சோமசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன், வடமராட்சி அரசியற்துறை பொறுப்பாளர் இ.தயா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கனகசபாபதி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக - யா.மா.கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் 'நமது ஈழநாடு' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான சி.சிவமகாராசா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



# குறைதீர் மன்றம்

1995ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின்போது எமது வீடு முற்றாக அழிக்கப்பட்டு, கிணறு மண் போட்டு நிரப்பப்பட்டு, பாதுகாப்புப் படையினர் முட்கம்பி வேலி போட்டு அடைத்திருந்தனர்.

16.04.1998ஆம் ஆண்டு நான் வேலை செய்த யாழ். மாநகர சபை மூலமாக வீட்டுக்கான நஷ்டஈடு கோரி விண்ணப்பம் செய்திருந்தேன்.

எனது விண்ணப்பம் தொடர்பாக 23.01.2002 திகதியிட்டு RRAN அமைப்பிடமிருந்து, எனக்கு ரூபா 1,50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் பணம் அனுப்பி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 11 மாதங்களாகியும் எதுவித பதிலுமில்லை. நான், எமது பிரதேசத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு இது தொடர்பில் கடிதங்கள் அனுப்பியும் பதில் எதுவுமில்லை. எனவே, எனது நஷ்டஈடு கிடைப்பதற்கு தங்கள் பத்திரிகையின் குறைதீர் மன்றத்தினூடாக ஏதும் நடவடிக்கை எடுப்பீர்களா?

அ.அருளம்பலம்,
சென்.செபஸ்தியன் லேன்,
கோண்டாவில்.

**நமது ஈழநாடு**

தங்களது விடயம் தொடர்பாக 'நமது ஈழநாடு' யாழ். மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டது. தங்களுக்கான நஷ்டஈட்டைக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்பதுடன் தற்போது RRAN மீள் கட்டமைப்புச் செயற்பாடுகள் நடைபெற்றுவருவதால் RRAN தனது வேலைத்திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் RRAN அமைப்பு வடக்கிற்கான புனர்வாழ்வு அமைச்சின் கீழ் திணைக்களமாக மாற்றப்படவுள்ளபடியால் தாங்கள் தொடர்ந்தும் வடக்கிற்கான புனர்வாழ்வு அமைச்சிடம், தங்கள் நஷ்டஈடு தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கும்படி யாழ்.மாவட்டச் செயலக அதிகாரிகள் கூறியுள்ளனர். RRAN அமைப்பின் செயற்பாடுகளை, இனி வரும் காலங்களில், வடக்கிற்கான புனர்வாழ்வுத் திணைக்களம் ஆரம்பித்ததும் நமது ஈழநாட்டுடன் மீண்டும் தங்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# சீனக் கம்யூனிஸக் கட்சியின் புதிய போக்கு மேற்குலகை திருப்திப்படுத்துவதாகவே உள்ளது

கே.ரீ.கணேசலிங்கம்



புதிய தலைவராகப் பொறுப்பேற்கவிருக்கும் ஹு ஜின்ரோ.

சோவியத் யூனியன் வீழ்ச்சியுடன் சோஸலிஸம் வீழ்ந்து விட்டதெனக் கருதும் அறிஞர்கள் நம்மிடையேயும் இல்லாமலில்லை. ஆனால் சோஸலிஸம் இல்லாவிட்டாலும் கம்யூனிஸக் கட்சிகள் உயிர்வாழ்கின்றன என்பதற்குச் சீனக் கம்யூனிஸக் கட்சியின் 16ஆவது உச்சிமகாநாடு சிறப்பான எடுத்துக்காட்டாகும். சீனாவின் கம்யூனிஸமோ சோஸலிசமோ இல்லாதுவிட்டாலும் கம்யூனிஸக் கட்சியும் அதன் செலவரக்குமிக்க ஆட்சியும் நிலைக்களமாக அமைந்திருக்கின்றது என்பது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, அதுவே ஆசியாவினதும், முழு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளதும் எதிர்காலமென நம்பப்படும் ஒரு அரசியலையும் சமகாலத்தில் காணமுடிகின்றது. ஆனால் சீனாவும், அதன் சோஸலிஸப் பொருளாதாரமும், அது சார்ந்த உலகப் போக்கும் மாறியேவிட்டது என்பதே பொதுவான எடுகோளாகும். அத்தகைய மாற்றத்தை நோக்குவதன் வாயிலாக சீனாவின் எதிர்கால விருப்பத்தினை மதிப்பீடு செய்ய முயலலாம்.

சீனக் கம்யூனிஸக் கட்சியின் 16ஆவது உச்சிமகாநாடு தியன்மென் சதுக்கத்தில் பல ஆயிரக்கணக்கான கட்சி உறுப்பினர்களுடன் ஆரம்பமாகியது. கட்சியினதும், அரசாங்கத்தினதும், புதிய தலைமைகளைத் தெரிவுசெய்வதுடன், கட்சியில் புதிய உறுபபினர்களை இணைத்துக் கொள்வதற்குமான மகாநாடாக அமைந்துள்ளது. வரலாற்றில் சீனக் கம்யூனிஸக் கட்சி எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களை அதிகாரத்திலிருந்து நீக்குவதுடன் இளந்தலைமுறையினருக்கு வாய்ப்பைக் கொடுக்கப் போகின்ற நிகழ்வாகவும் இம்மகாநாடு அமைந்துள்ளது. இதுவரை மாவோ சேதுங் இறக்கும் வரையும் ஆட்சியில் அமர்ந்தது போல், டெங் ஸியாவோ பெங் இயங்க முடியாத நிலைவரை ஆட்சியில் அமர்ந்தது போல், அல்லாமல் ஜியாங் செமின் செயற்படுவதையும், புதியவர்களை ஆட்சியில் அமர்த்துவது மட்டுமல்லாது ஆட்சிக்காலத்தை ஐந்து ஆண்டுகளாக வரையறுக்கின்ற போக்கையும் இது காட்ட முயன்றுள்ளது,

ஜியாங் செமின் கட்சி மகாநாட்டு உரையின்போது - ஜனநாயகத்தை சீனாவும், சீனக் கம்யூனிஸக்கட்சியும் வரவேற்பதாகவும், அதிகமான ஜனநாயகமயவாக்கத்தை ஏற்படுத்தப் போவதாகவும் கூறியிருந்தார். மேற்கு மாதிரியில் உலகத்திற்குப் பதிலளிக்கும் பாணியிலேயே செமினின தலைமை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது தெளி வாகின்றது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை கட்சியின் தேர்தலுக்கூடாக ஆட்சி மாற்றம் என்பது மேற்கு நாடுகள் அல்லது ஜனநாயக நாடுகள் நிகழத்தும் தேர்தலுக்கு ஓரளவேனும் ஒத்துபபோகக் கூடியதாகவே உள்ளது. ஜனநாயக நாடுகளின் கட்சிகளுக்கு பதிலாக சீனாவில் கம்யூனிஸக் கட்சி என்பதுதான் வேறுபாடாக உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி காங்கிரஸினால் தெரிவு செய்யப்படுகின்றார். சீனாவின் அதிபர் கம்யூனிஸக்கட்சியின் தேசிய மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படுகின்றனர். கம்யூனிஸக்கட்சிக்கு உறுதுணை யாக எட்டுக்கு மேற்பட்ட சிறிய கட்சிகள் சீனாவில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே மாவோவின் நவீன ஜனநாயகத்திற்கு புதிய அர்த்தங்களை ஜியாங் செமின் ஏற்படுத்தி வருகின்றமை மேற்கு நாடுகளின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பது போன்றும் காணப்படுகின்றது. ஆனால் செமின் மாற்றத்துக்கு மேற்கு மட்டுமல்ல தியன்மென் சதுக்கமும் ஒரு காரணமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. 1989 களில் மாணவர் மீது சீனாவின் ஆட்சி மேற்கொண்ட 'தியன்மென் படுகொலை' என்று அழைக்கப்படும் சம்பவத்தின் பின்னர், சீன ஆட்சியாளர்கள் மத்தியில் ஜனநாயகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியுள்ளது. அது எழுபது வயதுக்கு உட்பட்டவரை இளந்தலைமுறையென இனங்கண்டிருப்பதுதான் வேடிக்கையாகவுள்ளது. சீனா மட்டுமல்ல இந்தியா உட்பட அனேக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இளந்தலைமுறையினரிடம் ஆட்சி அதிகாரம் கைமாற்றப்படாமை பெரும் குறைபாடாகவே காணப்படுகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது சீனா அபிவிருத்தி அடைந்த

## இருபது ஆண்டுகளுக்குப் பின் பொருளாதார மறுசீரமைப்புக்கு வழிகோலுகின்றது சீனா!

நாடுகளில் இளந்தலைமுறையினரை ஆட்சியில் உள்வாங்க முன வந்திருப்பது திருப்திதரக்கூடிய அம்சமாகும்.

சனாவின் இவ்வகையான அணுகுமுறை மேற்கு நாடுகளுடனான வல்லரசுப் போட்டிக்கான தயார்ப்படுத்தலாகவே கொள்ள வேண்டியுள்ளது. சீனாவின் அரசியல் கொள்கையில் ஏற்பட்டுவரும் திடீர் திருப்பங்களால் மேற்கு நாடுகளின் ஜனநாயகக் கொள்கைக்கு ஒப்பானதாக இல்லாது விட்டாலும கம்யூனிஸக்கட்சியின் கொள்கையமைப்பிலிருந்து மாறுபட்டதாகவே உள்ளது. ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பற்றி மிகத்தீவிரமாக உச்சரிக்கும் மேற்கு உலகத்திற்கு சீனாவின் அணுகுமுறை புதிய நெருக்கடியை வழங்கியுள்ளதையே உணர்த்துகின்றது. தைவான் விவகாரத்தைக் கையாளுவதற்கு ஏற்ற வகையிலும், பல் விடயங்களை சீனக் கம்யூனிஸக்கட்சி தனது மகாநாட்டில ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே ஹெங்ஹெங், மக்கோ பிரதேசங்கள் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பது "One China Principle" ஐ பின்பற்றும் சீன ஆட்சியாளர்களுக்கு தைவான் அடுத்த இலக்காக அமைந்திருக்கின்றதென்பதையும் உறுதிப்படுத்துவதற்கான முயற்சியாகவே அமைந்துள்ளது.

பொருளாதாரச் சீர்திருத்தங்களை அதிகமாக ஏற்படுத்திவரும் சீனா 1970களின் பிற்பகுதியிலேயே சந்தைப் பொருளாதாரத்தை பின்பற்றத் தொடங்கிவிட்டது. சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படைகளைக் கொண்ட சீனா வேகமாக தனியார்மயமாக்கத்துக்குள் இணைந்து வருகின்றது. சீனாவின் ஊழியப்படையின் வீதாசாரத்தை நோக்கும்போது விவசாயத்தில் பங்கு (73%) மிக உயர்வாக காணப்படுவதும், கைத்தொழில் (14%) மற்றும் சேவைகளின் (13%) பங்கு மிகக் குறைந்த நிலையிலுள்ளபோதும் சீனாவின் உள்நாட்டு உற்பத்தி விவசாயத்து றையில் 19 வீதத்தினையும், கைத்தொழில் 48வீதத்தினையும், சேவைத்துறை 33 வீதத்தினையும் கொண்டிருப்பது தனியார் பொருளாதரத்தில் உள்வாங்கப்படும் அளவின் வேகத்தினை உணர்ந்து கொள்ள் முடியும். இதனைத் தெளிவுபடுத்த இன்னோர் தகவலையும் சேர்த்துக்கொள்ளலாம். 1978 ஆம் ஆண்டு உற்பத்தியின் பங்கில் அரசு 78 வீதத்தினையும், 22 வீதக் கூட்டு உற்பத்தியும் காணப்பட்ட நிலை, 2000 ஆம் ஆண்டில் தனியார் 25 வீதமாகவும் அரசு வெறுமனமே 27 வீதத்தினை மட்டும் கொண்டதாகவும், அரசும் தனியாரும் கூட்டாக 48 வீதத்தினை பங்கெடுத்துக் கொள்வதாகவும் அமைந்திருந்தது. இதிலிருந்து சீனாவின் தனியார்மயப்படுத்தல், பொருளாதாரத்தில் எந்தளவுக்குச் செல்வாக்கு செலுத்தி வருகின்றது என்பது தெளிவாகும். சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குத் திட்டமிடல் பொருளாதாரத்தின் அமுல்படுத்தலும் ஒரு காரணமெனக் கருதுகின்ற போக்கு சீனாவுக்கு முன்னனுபவமாக அமைந்திருக்கிறதுபோல் தெரிகின்றது. சீனாவின் எழுச்சிக்கும், அரசியல் பலத்திற்கும் பொருளாதாரமே அடிப்படையென்பது புலனாகும் விடயமாகும்.

அதனாலேயே சீனா மேலும், மேலும் பொருளாதாரச் சீர்திருத்தத்தினை ஏற்படுத்திக் கொண்டு வருவதுடன் உலகப் பொருளாதாரத்தின் பங்கிலும் அதன் செல்வாக்கினை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் சீனாவின் அதிகாரமும், கம்யூனிஸக் கட்சியின் அரசியலும் நிலையானதாக அமைந்துவிடுமென சீன ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.



ஒன்பது பேர் கொண்ட புதிய அரசியல் குழு.

பொருளாதார வளர்ச்சியானது இனப்பகைமையையும், முரண்பாட்டையும் தீர்க்கும் காரணியாகவே கொள்ளப்படுகின்றது. சீன மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 2% மாகக் காணப்பட்டபோதும் அவர்கள் இஸ்லாமிய நாடுகளை அண்டிய மாகாணமான எக்ஸ்யாங் யுகார் பகுதியிலேயே அதிகமாக உள்ளனர். அது மட்டுமன்றி மத அடிப்படையில் எழுந்துள்ள புதிய நெருக்கடிகள் அரசியலில் சீனாவுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாக உள்ளது. அதனை தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையிலேயே சீனா பொருளாதார வளர்ச்சியை முதன்மைப்படுத்தி வருகின்றது. தீபெத்தினை முழுமையாக விழுங்கிக் கொண்ட சீனா இனக்கலப்பினாலும் பொருளாதாரச் செழிப்பினாலும் முரண்பாட்டைத் தவிர்த்துக் கொண்டு படிப்படியாக சீனர்களாக்கும் போக்கினை கடைப்பிடித்து வருகின்றது. ஹொங்கொங் சீனாவின் அதிகாரத்துக்குள் வந்த பின்னர் மேலும் சீனா தனியார் பொருளாதார வகைக்குள் தீவிரமாக மாறிக்கொண்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. உலகம் வியக்கும் வகையில் சீனா ஹொங்கொங்கைக் கையாண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



ஜியாங் செமின்.

சீனாவின் வெளிநாட்டுக் கொள்கை சுமுகமாகவும், அமைதியானதாகவும் அமைவதுடன் அயல் நாடுகளுடனும் பிராந்தியங்களுடனும் நல்லிணக்கமுடைய உறவினைக் கடைப்பிடிப்பதே பொருத்தப்பாடானது என ஜியாங் செமின் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். முரண்பாடற்ற உலகத்தை ஏற்படுத்துவது என சீனா குறிப்பிட்டிருப்பது அதன் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக் கொள்வதையும் அதற்காகப் போட்டியிடப்போவதென்பதையுமே காட்டுகின்றது. அதாவது முழு உலகத்திலும் சீனாவின் அரசியல் செல்வாக்கினையும் அதிகார பலத்தையுமே எடுத்துக்காட்ட முயல்வதனையே குறிப்பிடுகின்றது.

இது கிழக்காசியாவிலும், மேற்காசியாவிலும் நெருக்கடியை அடைந்து வரும் சீனாவின் உறவினை சீர்செய்வதற்கான அணுகுமுறையாகக்கூட அமையலாம். சீனாவே அணுவாயுதப் பரவலுக்கு மேற்காசிய, கிழக்காசிய அரசுகளுக்கு வழங்குவதென்ற மேற்கின் குற்றச்சாட்டினைத் தவிர்ப்பதற்கான முயற்சியாகவே அமைந்துள்ளது. அதனால் மேற்குடான முரண்பாட்டை தவிர்ப்பது மட்டுமல்ல கிழக்காசிய, மேற்காசிய நெருக்கடியை தவிர்த்துக் கொள்வதற்கான அணுகு முறையாகவும் சீனாவின் அரசியல் தலைமை கருதுகின்றது. சீனாவின் கடந்தகால வெளிநாட்டுக் கொள்கையினால் அரசியலை விட பொருளாதார இலக்கு முதன்மையாக அமைந்ததென்பது ஜியாங் செமினின் உரையில் அழுத்திக் கூறப்பட்டது. அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் சீனாவுக்கு சாதகமானதாக அமைந்திருப்பதனாலும் அதே அணுகுமுறையைத் தொடர்ந்து பேண முயலுகின்றபோது, உலகளாவிய அதிகாரப் போட்டியிலும் சீனாவின் பங்கை உணர்த்தப் போராடும் என்பது தெளிவாகின்றது. ஆனால் அதனை உடனடியாக சாத்தியப்படுத்த முயலக்கூடாது என்பதில் செமின் மிகவும் அக்கறையுடன் செயல்பட்டார். அவரது காலத்தில் நிகழ்ந்த ஆப்கானிஸ் தான் போர், கைனன் தீவில் தரையிறக்கப்பட்ட அமெரிக்க வேவு விமானம் என்பன செமினின் அணுகு முறையை தெளிவுபடுத்துகின்றது.

ஆப்கான் போரில் நிதானத்தையும் அமைதியையும் கடைப்பிடித்துடன் - போரில் எந்தப் பங்களிப்பையும் எந்த நாட்டுக்கும் வெளிப்படையாக வழங்க முன்வரவில்லை. மேலும் போரின் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான தற்காப்புடன் பாதுகாப்பு - நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அதே போன்றே தைவான் கொள்கையில் அமெரிக்காவின் ஊடுருவலை தவிர்க்க அமெரிக்க வேவு விமானத்தைத் தரையிறக்கியதுடன் தகவல் ரீதியான பனிப்போரை நிகழ்த்திக்கொண்டதுடன் தொழில்நுட்பம், தகவல் என்பவற்றை பெறுவதுடன் மட்டும் நின்றுவிடாது, அமெரிக்க வேவு விமானத்தை அலகுகளாகப் பிரித்து அமெரிக்காவுக்கு அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

இது புஷ் நிர்வாகத்திற்குக் கிடைத்த பதிலடி என்பதை விட சீனாவின் அணுகுமுறை எது என்பதனை காட்டப் போதுமானது. அவ்வாறான போக்கு அடுத்துவரும் புதிய தலைமையிடம் இருத்தல் வேண்டுமென செமின் மட்டுமல்ல சீனக் கம்யூனிஸக் கட்சியியே விரும்புகின்றது. அதாவது சுருக்கமாகக் கூறுவதாயின் சீனா சர்வதேச விவகாரத்தில் ஈடுபட விரும்புவதுடன் அதற்கான தேவைப்பாடு ஏற்படும் சூழலிலும், அதற்கான உலக ஒழுங்கு அமையும்போதும் முன்வருவது பொருத்தமானதெனக் கருதுகிறது.

அதுவரை சகலவிதமான தயார்ப்படுத்தலுடனும் சீனா இருப்பதுடன் அதனை விரைவாக நிரப்ப முயல வேண்டுமெனவும் விரும்புகின்றது.

ஆனால் சீனக் கம்யூனிஸக் கட்சியின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களில் உள்நாட்டு ஜனநாயகம் பற்றியோ அல்லது மனித உரிமை விவகாரம் தொடர்பாகவே அது பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. சீன மக்கள் தொகையை குறைப்பதற்காக எடுத்த முயற்சி மீளவும் கைவிடப்பட்டு வருவதும், மானிட விருத்திக்கான, சமூக விருத்திக்காக, மாற்று நிலைகள் தொடர்பான சில கருத்துக்கள் கட்சி மகாநாட்டில் தொனித்தனவே அன்றி அவை பெரியளவில் முதன்மையடையவில்லை. மாறாக உள்நாட்டு உற்பத்தி அல்லது பொருளாதாரம் என்ற வடிவம் அதிகமாக உணர்த்தப்பட்டதை கவனத்தில் கொள்ளமுடிந்தது. மேலும் சீனக் கலாசாரம், தேசியம், இறையாண்மை, மேலாதிக்க எதிர்ப்பு என்ற கோணத்தில் பல விடயங்கள் கட்சி மகாநாட்டினூடாக வெளிவந்தன.

மொத்தத்தில் சீனக் கம்யூனிஸக் கட்சி மகாநாடு சீனாவின் உள்ளார்ந்த போக்கைக் காட்டிலும் வெளிவிவகாரத்திற்கான போக்கையே அதிகம் வெளிப்படுத்தியிருந்தது. குறிப்பாக மேற்கு உலகத்தின் மாதிரிக்கு ஏற்ப சீனாவை தயார்ப்படுத்த வலுவான அரசாக சீனக் கம்யூனிஸக் கட்சி சீனக்குடியரசை ஆக்க முயன்றுள்ளதனைக் காணமுடிகின்றது. ❖

- தலதா மாளிகை வழிபாட்டுக்கு -

# தாமதமாக வந்த ஜனாதிபதிக்கு தலையில் இடித்தது கூரை !

பதவியேற்று எட்டாவது வருடப் பூர்த்தி விழாவை யொட்டி கண்டி தலதா மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட பூசை வழிபாட்டுக்கும் ஜனாதிபதி சந்திரிகா வழமை போல காலதாமதமாகவே சென்றுள்ளார்.

காலை 10 மணிக்கு தலதா மாளிகையில் பூசைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நான்கு மணி நேர தாமதமாக பி.ப. 2 மணிககே ஜனாதிபதி சென்றுள்ளார். ஜனாதிபதி உரிய நேரத்தில் வந்து சேராததால் நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டு விட்டதாகக் கருதி, தலதா மாளிகையின் தியவதன நிலமே உள்ளிட்ட மதகுருக்கள் வழிபாட்டு அறையைப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டனர்.

தாமதமாக ஜனாதிபதி வந்ததும் மீண்டும் வழிபாட்டு அறை திறக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது. வழிபாட்டுக்காக அவசரமாக ஜனாதிபதி சந்திரிகா உள்ளே நுழைய முயன்றபோது பதிவான கூரையில் அவரது தலை இடித்ததாகவும் தெரியவருகின்றது.

# ஒஸ்லோ மாநாட்டில் வெள்ளை அறிக்கை தாக்கல்

- அமைச்சர் பீரிஸ் தகவல் -

ஒஸ்லோவில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கை அரசின் சார்பில் வெள்ளை அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகள், சர்வதேச நாடுகளிடம் எதிர்பார்க்கப்படும் நிதியுதவி, அதனைச் செலவிடுவது தொடர்பான திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்த வெள்ளை அறிக்கை அமையும் எனவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு எதிரான

# மனுக்கள் மீதான விசாரணைகள் அடுத்த வருடத்துக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு போர் நிறுத்த உடன்பாட்டுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகளை, மேன்முறையீட்டு நீதிமன்றம் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

புரிந்துணர்வு உடன்பாடு அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு முரணானது எனவும் இதனைத் தடை செய்யவும் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், ஜே.வி.பி., சிஹல உறுமய, சிறிலங்கா ஜாதிக சங்விதானய ஆகியன முறையீடுகளைச் செய்திருந்தன.

இந்த வழக்குகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகள், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அமர்வில் இடம்பெறவிருந்த மூன்று நீதிபதிகளில் ஒருவர் மன்றுக்குச் சமூகமளிக்காததால் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி வரை விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# லெபனானிலிருந்து சடலமாக திரும்பிய பணிப்பெண்!

லெபனானுக்கு வேலை வாய்ப்புக்குச் சென்ற பெண்ணொருவர் பின் பிணமாக நாடு திரும்பிய சோகச சம்பவமொன்று அண்மையில் அக்கரைப்பற்றில் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சின்னமுகத்துவாரம் மேரி ரில்வினா றொசாறியோ என்ற 22 வயது இளம் பெண்ணுக்கே இந்தக்கதி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம பணிப்பெண்ணாக லெபனான் சென்ற இந்தப் பெண் அங்கிருந்து தான் வேலைப்பளு அதிகரித்துள்ளதாகவும், தான் மிகவும் கொடுமைக்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்படுவதாகவும், இதனால் எஜமானிடமிருந்து தப்பிவந்து இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரிவித்து தனது கணவருக்கு கடிதம் அனுப்பி இருந்தார்.

சுமார் ஒரு மாதகால இடைவெளிக்குப் பின்பு இப்பெண் இறந்துள்ளதாகவும், அவரது பிரேதத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம் மூலம் தனக்கு அறிவிக்கப்பட்டதென்றும் அவரது கணவர் தெரிவித்தார்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

அகவை நான்கில்



பெயர் : ர.பானுஜன்
முகவரி: கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு.

அகவை ஐந்தில்



பெயர் : ஜெ.கிருஷாயினி
முகவரி: மு.மூ.வீதி, நெல்லியடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



யாழ்.நகரில் மீண்டும்...

சிங்கர்







இல.1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பரம்பரை பரம்பரையாகவுள்ள அதியுயர் நம்பிக்கை

காட்சியறைத் திறப்புவிழா

இன்று காலை 11 மணிக்கு



TEFAL
Welling
TCL
Whirlpool
HITACHI
SISIL



இன்றே நாடுங்கள்

சிங்கர் பன்டாஸ்டிக்கார்



SINGER®
Trusted Excellence
® Registered Trade Mark of The Singer Company

(சி-185)

சிங்கரின் இலகு தவணை முறை - உங்கள் கனவை நனவாக்கும்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- உங்களின் பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்கு கணினித்துறையில் அத்தியாவசியமாக அமைய வேண்டின் தொடர்பு கொள்க
- மேலும் சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், கொம்பியூட்டர் **Games**, மற்றும் விசேட வகுப்புகள்.

விண்ணப்ப முடிவு: 15.12.2002

**Computer Electronic Systems (Pvt) Ltd.**
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Opposite of J/Hindu Primary School)
(சி-158)

# கடந்த இருபது வருடங்களில் 17,648 மாவீரர்கள் வீரச்சாவு

1982ம் ஆண்டு முதல் 2002 செப்ரெம்பர் 30ம் திகதி வரையான காலப்பகுதியில் 17,648 மாவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளதாக தமிழீழ மாவீரர் பணிமனை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டுவாரியாக - 1982 இல் ஒருவரும், 1983 இல் 13 மாவீரர்களும், 1984 இல் 50 மாவீரர்களும், 1985 இல் 188 மாவீரர்களும், 1986 இல் 318 மாவீரர்களும், 1987 இல் 516 மாவீரர்களும், 1988 இல் 379 மாவீரர்களும், 1989 இல் 418 மாவீரர்களும், 1990 இல் 961 மாவீரர்களும், 1991 இல் 1613 மாவீரர்களும், 1992 இல் 788 மாவீரர்களும், 1993 இல் 925 மாவீரர்களும், 1994 இல் 375 மாவீரர்களும், 1995 இல் 1505 மாவீரர்களும், 1996 இல் 1377 மாவீரர்களும், 1997 இல் 2106 மாவீரர்களும், 1998 இல் 1798 மாவீரர்களும், 1999 இல் 1545 மாவீரர்களும், 2000 இல் 1980 மாவீரர்களும், 2001 இல் 759 மாவீரர்களும், 2002 இல் 31 மாவீரர்களும் வீரச்சாவடைந்துள்ளனர்.

இவர்களில் 3766 பெண் போராளிகளும் 13,882 ஆண் போராளிகளும் அடங்குவர்.

மாவட்ட - ரீதியாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6487 மாவீரர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 4535 மாவீரர்களும், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 2521 மாவீரர்களும், திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 1479 மாவீரர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 1291 மாவீரர்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 1037 மாவீரர்களும், வெளியில் இருந்து 298 மாவீரர்களும் இதுவரை வீரச்சாவடைந்துள்ளனர்.

இதுவரை 241 கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 225 பேரும், மட்டு-அம்பாறையைச் சேர்ந்த 47 பேரும், வன்னியைச் சேர்ந்த 22 பேரும், திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 16 பேரும், முல்லைத்தீவைச் சேர்ந்த 10 பேரும், மன்னாரைச் சேர்ந்த 15 பேரும், வெளிப்பகுதிகளைச் சேர்ந்த 06 பேரும் கரும்புலிகளாக வீரச்சாவடைந்துள்ளனர்.

இவர்களில் 117 ஆண் கரும்புலிகளும் 46 பெண் கரும்புலிகளுமாக 163 பேர் கடற்கரும்புலிகளும், 60 ஆண் கரும்புலிகள், 18 பெண் கரும்புலிகளுமாக 78 தரைக் கரும்புலிகளும் வீரச்சாவடைந்துள்ளதாக மாவீரர் பணிமனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# புலிகளுடன் முக்கிய விடயங்கள் அரசு பேசுவதற்குத் தவறுகிறது

## - மிலிந்தவிடம் சந்திரிகா குற்றச்சாட்டு -



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் அரசு முக்கிய விடயங்கள் குறித்து பேசாது தவிர்த்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார். நேற்று தம்மை சந்தித்த அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் அவர் நேரில் இக்குற்றச்சாட்டை முன் வைத்தார்.

நேற்று அமெரிக்காவிலிருந்து திரும்பிய அமைச்சர், தாய்லாந்துப் பேச்சுகள் குறித்த விபரங்களை ஜனாதிபதிக்கு தெரிவிக்குமுகமாக அவரைச் சந்தித்தார். இதன்போது அரசின் சமாதான முயற்சிகளை விமர்சித்த ஜனாதிபதி, விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறிச் செயற்படுகின்றனர். எனவே இந்த ஒப்பந்தத்தில் புதிய நிபந்தனைகளைச் சேர்க்கவேண்டும். இடைக்கால நிர்வாகத்தை புலிகளுக்கு வழங்குவதை அரசு கைவிட்டாலும், அதைவிடக் கூடிய அதிகாரத்தை புலிகளுக்குக் கொடுக்க அரசு திட்டமிடுகிறது எனவும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களுக்குப் பின் தான் பிரதமர் ரணிலைச் சந்திக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா இச்சந்தர்ப்பத்தின் போது அமைச்சர் மிலிந்தவிடம் கூறினார். (01)

# நடைபாதை வியாபாரிகளை அகற்ற பொலிஸ் - மாநகரசபை நடவடிக்கை

யாழ்.நவீன சந்தை நடைபாதை வியாபாரிகளை அங்கிருந்து அகற்ற பொலிசாரின் உதவியை யாழ். மாநகர சபை நாடியுள்ளது. இது குறித்து மாநகரசபை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.பொலிஸ் அதிகாரிகள் நடத்தவுள்ளனர்.

மரக்கறிச் சந்தைப்பகுதியில் கட்டிடத் தொகுதி ஒன்றை விரைவாக அமைப்பதற்கு வசதியாகவே நடைபாதை வியாபாரிகளை அங்கிருந்து அகற்ற வேண்டியிருப்பதாக மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நடைபாதை வியாபாரிகளை முனீஸ்வரன் கோயில் பகுதிக்கு செல்லுமாறு மாநகரசபையினர் ஏற்கனவே பணித்திருந்தனர்.

எதிர்வரும் செவ்வாயன்று இந்த நடைபாதை வியாபாரிகளை அங்கிருந்து அகற்ற பொலிசார் நடவடிக்கை எடுக்கத்திட்டமிட்டுள்ளனர்.(லி)

## கேணல் தீபன்....

காப்பை கவனத்தில் கொண்டு இச் சந்திப்பு, தெல்லிப்பளையிலிருந்து முகமாலைக்கு மாற்றப்பட்டிருக்கலாம் என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி - இன்று முகமாலையில் 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள சந்திப்பில், விடுதலைப் புலிகளின் தரப்பில் - வட போர் முனைக் கட்டளைத் தளபதி கேணல தீபன், கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்.கேணல் செழியன், வடபோர் முனை கட்டளைத் தலைமையகத்தைச் சேர்ந்த லெப்.கேணல் அறிவு, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் இளம்பரிதி, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் செயலாளர் புலித்தேவன் ஆகியோரும் -

அரசாங்கத் தரப்பில் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின பெர்ணாண்டோ தலைமையில், இராணுவத்தைச் சேர்ந்த யாழ்.பிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் எஸ்.பி.வீரசேகர, விமானப்படையைச் சேர்ந்த குரூப் கப்டன் கே.குணதிலக ஆகியோருடன் அப்துல் என்பவரும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் புரூண்டம் மற்றும் செயலாளர் ஸ்ராண்டர் ஸ்காவிக் ஆகியோரும் இன்றைய சந்திப்பில் பிரசன்னமாயிருப்பர்.

இன்றைய சந்திப்பில் - கடந்த முறை முகமாலையில் கடற்படை - கடற்புலிகளின் இடையே ஆராயப்பட்ட விடயங்களோடு, உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய விவகாரம் முக்கியமாகக் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வீதியை.....

மைதானத்திலிருந்து இச் சிறுவன் வீதியைக் கடக்க முற்பட்ட சம[illegible] வீதியால் வந்த லொறி சிறுவன் மீது மோதியது. பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சிறுவன் அங்கு செல்ல முன்பே மரணமடைந்துவிட்டார். (க,லி,39).

## பட்டாசு.....

காணாமற்போயுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் 10 மாலுமிகள் கடமையில் இருந்துள்ளனர்.

தொடர்ந்தும் கப்பலில் பட்டாசு வெடித்துக் கொண்டிருப்பதால் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்றும் ஆனாலும் மீட்புப் பணி தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளுக்கு ...

தற்போதைய சமாதான நடவடிக்கைகளைக் கண்டித்து பொதுஜன ஐக்கிய முன்னணி விடுத்த ஏழு பக்க அறிக்கையை வெளியிடு முகமாக இச்செய்தியாளர் மாநாடு கூட்டப்பட்டது.

இங்கு குறிப்பிட்ட அறிக்கையை வெளியிட்டுப் பேசிய கதிர்காமர் -

இதுவரை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் கூடுதலான வாய்ப்பு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு கிடைத்திருக்கிறது. நோர்வே அரசாங்கம் நடுநிலையாகச் செயற்படவில்லையென்றும் குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான பேச்சுக்கள் மூலமாக - விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை பிரிட்டனும் அமெரிக்காவும் ஆதரித்துள்ளன. அதற்கு அங்கீகாரமும் வழங்கியுள்ளன. சில தனிப்பட்ட காரணங்களுக்காக உதவி வழங்கும் நாடுகள் சில ஒன்றிணைந்து ஒரு பயங்கரவாத அமைப்பின் நலனைப் பேணுகின்றன. புலிகள் ஒரு சுதந்திர நாட்டை உருவாக்க உறுதியாக வேலை செய்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் தமக்கான அதிகார அமைப்பொன்றை வடக்கு கிழக்கில் உருவாக்கி வருவதோடு, தனிநாடு ஒன்றை அமைக்கும் ஆபத்தான கட்டத்தை நோக்கிச் செல்வதை களநிலை யதார்த்தம் உணர்த்துகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லும் போது 5 அம்சங்களுக்கு கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகமவும் செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் பேச்சுவார்த்[illegible]கள் சம்பந்தமாக அறிவிக்கப்படவில்லை. வருங்காலத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் பரவலான பங்களிப்பு அவசியம் என்பதே பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்தாகும். ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் வருங்காலத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி....

நடவடிக்கை எடுக்காமை குறித்து ஜனாதிபதியையும் சர்வதேச மனித உரிமை அமைப்பு கண்டித்துள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட ஜானக பெரேரா தற்போது அவுஸ்ரேலியாவில் இலங்கையின் தூதராகவும் தளுவத்த பிரேசில் தூதுவராகவும் பணியாற்றி வருவது குறிப்பிடத்த[illegible].

மக்கள் வங்கி
அனுசரணையுடன்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை
மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு - 2002

எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த மேற்படி கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் யா/வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

க.பொ.த. (சா/த) 2002 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் இக்கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெற வருமாறு மாணவ மணிகளை வரவேற்கின்றோம்.

அனுசரணை :-
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்கில் இணைந்து நீங்களும் பயன்பெறுவீர்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.97 | 96.48 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 147.84 | 149.13 |
| 1 யூரோ | 96.10 | 96.53 |
| 1 சுவிஸ் பிராங் | 63.61 | 64.58 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.00 | 53.95 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.71 | 25.71 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.